
# பன்முகப் பார்வையில் திருக்குறள்

தொகுதி - I

205 மணி நேரம் இணையவழியில் நடைபெற்ற உலகச் சாதனை திருக்குறள்
ஆய்வரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு



முனைவர் தாமரை

# பன்முகப் பார்வையில் திருக்குறள்

தொகுதி 1

பதிப்பாசிரியர்
"திருக்குறள் ஔவை"
முனைவர் **தாமரை**

இலக்கியா பதிப்பகம்,
தமிழூர்

## பதிப்புக்குழு

திருக்குறள் ஔவை

**முனைவர் தாமரை**

நிறுவுநர் மற்றும் தலைவர்

திருச்சிராப்பள்ளிச் செம்மொழி மன்றம், திருச்சி

ஞானபீட விருதாளர் கலைமாமணி

**குமரிச் செழியன்**

துணைத் தலைவர்

திருச்சிராப்பள்ளிச் செம்மொழி மன்றம், திருச்சி

**பேரா. முனைவர் வீ. ரேணுகாதேவி**

தகைசால் பேராசிரியர்

மேனாள் மொழியியல் புலத்தலைவர்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

**முனைவர் மா. பாப்பா**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை

**முனைவர் சௌ. கீதா**

முதல்வர்

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

காரிமங்கலம்

ISBN. No. : 978-93-92649-27-1

**நூல் தலைப்பு :**

* பன்முகப் பார்வையில் திருக்குறள்

தொகுதி 1

**பதிப்பாசிரியர் :**

* திருக்குறள் ஔவை முனைவர் **தாமரை**

**பதிப்பு:**

* முதற்பதிப்பு, ஜூன், 2022.

**உரிமை:**

* ஆசிரியருக்கு...

**பக்கங்கள் :**

*507

**விலை :**

* ரூ.500/-

அச்சிட்டோர்...

**இலக்கியா பதிப்பகம்**

தமிழூர் – 627 808,

அடைக்கலப்பட்டணம் அஞ்சல்,

தென்காசி மாவட்டம். கைபேசி : 99407 70433.

மின்னஞ்சல் : *elakkiyapathipagam@gmail.com*

38. சுற்றம் தழால் - வள்ளுவர் வழி
கு. திலகவதி - 324

39. வள்ளுவம் கடியும் கல்லாமை
சி. நந்தினி - 326

40. திருக்குறளில் இல்லறச் சிந்தனைகள்
அ. நாகஜோதி - 334

41. திருவள்ளுவர் காட்டும் எண்குணத்தான்
கோ. பங்கயம் - 341

42. குறள் சுட்டும் கல்விமேலாண்மை
முனைவர் வ. பழன்யா - 346

43. திருக்குறள் காட்டும் புறங்கூறாமையில் வாய்மை
முனைவர் மா. பாப்பா - 353

44. காமத்துப்பால் சொல்லும் வாழ்வியல் நெறிகள்
அ. பியூலா ரூபி - 360

45. புறச்சமயங்களில் வள்ளுவ சிந்தனைகள்
முனைவர் க. புஷ்பலதா - 368

46. திருக்குறளில் அரணின் சிறப்புகள்
மு.புஷ்பா - 378

47. திருக்குறளில் பொருளியல் சிந்தனைகள்
திருமதி மு. பூங்கொடி - 385

# திருக்குறள் காட்டும் புறங்கூறாமையில் வாய்மை

முனைவர் மா. பாப்பா,
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வுமையம்,
பாத்திமாகல்லூரி, மதுரை-18

முன்னுரை:-

வள்ளுவன் தன்னை உலகினுக்குத் தந்து வான்புகழ் கொண்ட தமிழ் இலக்கியம் தொன்மையும் பெருமையும் வாய்ந்தது. என்றும் எளிமையும் இனிமையும் உடைய வள்ளுவம் தமிழர் தம் அறநூல். வாழ்க்கையின் வழிகாட்டி. தனிமனித ஆளுமை வளர்ச்சிக்கு உதவும் உளவியல் நூல். இந்நூல் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலிலும் மனித வாழ்வின் அனைத்து நிலை களையும் மிகத் தெளிவாக விளக்கிஎன்றும் அழியாப் புகழுடன் விளங்கும் நூல். இத்தகைய திருக்குறளில் புறங்கூறாமையில் வாய்மைக் கருத்துக்களை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

அறம்:

அறம் என்பது பெரும்பாலும் பிறருக்குத் சொல்லாலும் செயலாலும் தீங்கு செய்யாமல் இருப்பது. அதனால் தான் வள்ளுவர்,

**"தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு"** (குறள்: 129 )

என்கிறார். தீயினால் சுடும் காயம் காலம் செல்லச செல்ல மறைந்து விடும். ஆனால், வாயால் சொல்லும் கடுஞ்சொல் வாழ்நாள் முழுவதும் வடுபோல் இருக்கும். அதனால், அறம் தவறிய சொல்லை யாரிடமும் யாரைப் பற்றியும் புறம் பேசாமல் இருப்பதே மேல். இதனை,

**"அறம்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்**
**புன்மையால் காணப் படும்"** (குறள்: 185)